# விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம்

> எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப் படுகிறார்கள் ... கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:23-26)

''விசுவாசத்தினால் மட்டும்'' இரட்சிப்பு என்ற உபதேசத்தை நம்புகின்றவர்கள், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமல்ல என்று வழக்கமாய்க் கூறுகின்றனர். அவர்கள், இரட்சிப்பிற்கான தேவனுடைய ஒரே நிபந்தனை என்ற வகையில் விசுவாசமானது மனிதரின் பகுதியில் வேறு எந்த ஒரு செயலையும் தவிர்த்து விடுகின்றது என்று வாதிடுகின்றனர். இதை அவர்கள் கோட்பாட்டில் எடுத்துரைத்தாலும், எப்பொழுதும் இதை அவர்கள் நடைமுறைப்படுத்துவதில்லை.

இரட்சிப்பு என்பது விசுவாசத்தின் அடிப்படையில் மட்டும் அமைந்திருந்தது என்றால், இரட்சிப்புக்கு அவசியமானவைகளாக வேறு எதுவும் போதிக்கப்படக் கூடாது. இது வேதாகமப் படிப்பு, போதனையைக் கவனித்தல், மனந்திரும்புதல், அறிக்கையிடுதல், "பாவிகளின் ஜெபத்தை" ஜெபித்து, ஒருவரின் இருதயத்தினுள் வருமாறு கிறிஸ்துவைக் கேட்டுக் கொள்ளுதல் ஆகிய எல்லாவற்றையும் தவிர்த்து விடும்.[1] இவைகள் யாவும், "விசுவாசம் மட்டும் போதும்" என்று போதிப்பவர்களால் விசுவாசத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என்று வழக்கமாகக் கருதப்படுகின்றது. மேற் குறிப்பிட்ட மற்ற நிபந்தனைகளைக் காட்டிலும் அதிகம் தகுதியுடைய செயலாய் இல்லாது இருப்பதினால் ஞானஸ்நானத்தையும் விசுவாசத்தில் ஏன் உள்ளடக்கக் கூடாது? ஞானஸ்நானம் பெறுகின்றவர் நேரடியாக எதுவும் செய்வதில்லை, ஆனால் அவர் தமது உடல் தண்ணீருக்குள் இடப்பட்டு தண்ணீரை விட்டு வெளியில் கொண்டுவரும்படி அனுமதிக்கின்றார், அவ்வளவே - இது இயேசு சிலுவையில் தம்மை அறையும்படி தாம் எதுவும் செய்யாமல், மற்றவர்கள் தம்மைச் சிலுவையில் அறைய தம்மை ஒப்புக் கொடுத்த செயலைப் போன்றதாகும். நமது பாவங்களுக்காக அவர் இறந்த பின்னர், அவர் மற்றவர்களால் அடக்கம் பண்ணப்பட்டு,

ஆவியானவரால் உயிர்த்தெழுப்பப்பட்டார் (ரோமர் 8:11).

## விசுவாசம் கீழ்ப்படிதலை உள்ளடக்குகின்றதா?

"விசுவாசம்" மற்றும் "விசுவாசி" (வினைச்சொல்) என்ற வார்த்தைகள், "நம்பிக்கை மற்றும் நம்பகத் தன்மை" என்று விளக்கப்படக் கூடிய pisteuo என்ற வார்த்தையின் வடிவங்களில் இருந்து வருகின்றன. இதில் கீழ்ப்படிதலை விளைவிக்கின்ற ஒருவரின் நம்பிக்கைக்குப் பதில்செயல் புரியும் விருப்பமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. Pisteuo என்பதற்கு R. பல்ட் மேன் அவர்கள் பின்வரும் விளக்கம் கொடுத்தார்:

> ... "கீழ்ப்படிய." எபிரேயர் 11ம் அதிகாரமானது விசுவாசித்தல் என்றால் [பழைய ஏற்பாட்டு] பவுல் ரோமர் 1:8; 1 தெச. 1:8 (இ.வ. ரோமர் 15:18; 16:19)ல் காண்பிக்கப்படுவது போல கீழ்ப்படிதல் என்றே அர்த்தப்படுகின்றது. அவர் விசுவாசத்தின் கீழ்ப்படிதல் பற்றி ரோமர் 1:5 மற்றும் இ.வ. 10:3; 2 கொரி. 9:13லும் இதைப் பற்றிப் பேசுகின்றார்).[2]

"விசுவாசம்" மற்றும் "விசுவாசி" ஆகியவை மனரீதியான அல்லது உணர்வுப் பூர்வமான பதில்செயல்களைக் காட்டிலும் அதிகமானவற்றைச் சுட்டிக்காட்டுகின்றன. "கீழ்ப்படியாதவர்கள்," "கீழ்ப்படியாமை" மற்றும் "கீழ்ப்படிதலின்மை" ஆகியவைகள் இவைகளுக்கு எதிராக உபயோகப் படுத்தப்பட்டிருக்கின்றன இந்த வார்த்தைகள் apeithia[3] என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. யோவான் 3:36ல், "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் [கிரேக்கம்: pisteuo] நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ/ குமாரனுக்குக் கீழ்ப்படியாதவனோ [கிரேக்கம்: apeitheo] ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன் மேல் நிலை நிற்கும்" என்று எடுத்துரைக்கப்படுகின்றது. pisteuo ("விசுவாசித்தல்") என்பதன் நேர்மறைப் பயன்பாடானது apeitheo ("கீழ்ப்படியாமை") என்ற எதிர்மறைப் பயன்பாட்டிற்கு நேர்மாறானதாக உள்ளது, இது "விசுவாசம்" மற்றும் "விசுவாசித்தல்" என்ற வார்த்தைகளினால் சுட்டிக்காட்டப்படும் செயல், செயல்படுவதற்குத் தூண்டப்படும் போது நிறைவடைகிறது என்பதை உணர்த்தும் தெளிவான ஆதாரமாக உள்ளது.

எபிரேயர் 3:18, 19ல் ஒரு ஒப்பீடு உள்ளது: "பின்னும், என்னுடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லையென்று அவர் யாரைக் குறித்து ஆணையிட்டார்? கீழ்ப்படியாதவர்களைக் [கிரேக்கம்: apeitheo] குறித்தல்லவா? ஆதலால், அவிசுவாசத்தினாலே [கிரேக்கம்: apisteo] அவர்கள் அதில் பிரவேசிக்கக் கூடாமற் போனார்களென்று பார்க்கிறோம்." இவ்வசனப் பகுதி, கானானைக் கைப்பற்றும்படி அங்கு செல்லாமலிருந்து இஸ்ரவேலர்கள் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போனதைக் குறிப்பிடு கின்றது. கிறிஸ்தவர்கள் "அவிசுவாசமுள்ள இருதயம்" (எபி. 3:12-15)

உடையவர்களாய் இல்லாதிருக்கும்படி எச்சரிக்க இஸ்ரவேலர்கள் ஒரு உதாரணமாய்ப் பயன்படுத்தப்பட்டனர் (எபி. 3:9-11, 16-19). இஸ்ரவேலர்கள் "விசுவாசமில்லாமல் [கிரேக்கம்: *pistis*] கேட்டபடியால்" (எபி. 4:2) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்தி பயனற்றதாகியது. அவர்களைக் கீழ்ப்படிதலுக்குள் கொண்டு வரக் கூடிய விசுவாசம் அவர்களிடத்தில் இல்லாத காரணத்தினால் அவர்கள் தேவனுடைய பலனைப் பெறத் தவறி விட்டனர். அவர்கள் "கீழ்ப்படியாமையினால்" [கிரேக்கம்: *apeithia*] தேவனுடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கத் தவறி விட்டனர் என்று எபி. 4:6 கூறுகின்றது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், அவர்களுடைய "கீழ்ப்படியாமையின் [கிரேக்க: *apeithia*] உதாரணத்தை" பின்பற்றாதிருக்கும்படி கிறிஸ்தவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றார் (எபி. 4:11). KJVயில் *apeithia* என்ற வார்த்தை வடிவங்கள் "கீழ்ப்படியாமை" என்று மொழிபெயர்க்கப்படுவதற்குப் பதிலாக எபி. 4:6, 11ல் அவிசுவாசம் என்றும் மற்றும் யோவான் 3:36ல் "விசுவாசியாதவன்" என்றும் நியாயமற்ற வகையில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

கீழ்ப்படிதலின்றி விசுவாசம் என்பது முழுமையற்றதாய் உள்ளது என்று இவ்வசனப் பகுதிகள் தெளிவாய்க் காண்பிக்கின்றன. விசுவாசியாதவர்கள் என்பவர்கள் கீழ்ப்படியாதவர்களாய் இருக்கையில், விசுவாசம் கொண்டவர்கள் கீழ்ப்படிந்திருந்தவர்களாய் இருந்தனர். கீழ்ப்படிதலுக்கு வழி நடத்துகின்ற விசுவாசமே பலன்பெறும் விசுவாசமாயிருந்தது.

## விசுவாசத்தினால் மட்டுமே இரட்சிப்பு உள்ளதா?

நற்செயல்களில் அடிப்படையில் இரட்சிப்பு என்ற உபதேசமான இன்னொரு புறக்கோடியான நிலையை எதிர்த்துப் போராடுவதற்காக மார்ட்டின் லூத்தர் "விசுவாசம் மட்டும்" போதும் என்ற உபதேசத்தை வடிவமைத்திருக்கலாம். அவர் தம் மொழிபெயர்ப்பில், ரோமர் 3:28ல் "விசுவாசம்" என்ற வார்த்தைக்குப் பிறகு "மட்டும்" என்ற வார்த்தையை உட்புகுத்தினார். இது புரொட்டஸ்டண்டு சபைகள் பலவற்றில் அடிப்படை உபதேசமாக இருந்துள்ளது. பெயர்க்குழுக் கூட்டத்தின் சட்ட புத்தகமான *The Book of Discipline* (ஒழுங்கு முறையின் புத்தகம்) என்ற நூலில் பின்வருமாறு கூறப்படுகின்றது: "ஆகையால், நாம் விசுவாசத்தினால் மட்டுமே நீதிமானாக்கப்படுகின்றோம் என்பது முழுமையானதும் ஆறுதல் தருவதாகவும் உள்ளது."[4]

வேதாகமமானது "விசுவாசம் மட்டும்" போதும் என்றோ அல்லது "செயல்கள் மட்டும்" போதும் என்றோ போதிப்பதில்லை, ஆனால் "அன்பினால் கிரியை செய்யும் விசுவாசம்" (கலா. 5:6) பற்றிப் போதிக்கின்றது. எபி. 11:6ல் இந்த சத்தியம் முன் வைக்கப்படுகின்றது: "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகின்றவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க

வேண்டும்."[5] தேவன் இருக்கிறார் என்று விசுவாசிப்பது மட்டுமல்ல, ஆனால் அவரைப் பிரியப்படுத்துவதற்கு நாம் "அவரைத் தேட" வேண்டும் என்பது அவசியமாகும். "தேடுதல்" என்பது மனித முயற்சியை மறைமுகமாய்க் குறிப்பிடுகின்றது.

பிசாசுகள் நடுங்கப் போதுமான அளவுக்கு விசுவாசிக்கின்றன என்று யாக்கோபு சுட்டிக்காட்டினார் (யாக். 2:19). அவர், "அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தான் செத்ததாயிருக்கும்" (யாக். 2:17; வ. 20, 26ஐயும் காணவும்) என்று கூறினார். தேவனுடைய பார்வையில் நீதிமானாக்கப்படுதல் என்பது விசுவாசத்தின் மூலமாக மட்டும் வருவதில்லை: "ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலே மாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே" (யாக். 2:24).

இயேசுவில் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் மட்டுமே இயேசுவுக்குக் கீழ்ப்படிதல் வர முடியுமென்பதால் இயேசுவில் விசுவாசம் கொள்ளுதல் என்பது முக்கியமானதாக உள்ளது (யோவா. 3:36). ஒரு நபர் தனது வீட்டிலிருந்து தொலை தூரத்தில் உள்ள ஒரு நாட்டில் தனது நண்பர்களைக் காணச் சென்றிருக்கும் பொழுது வியாதிப்படுகின்றார் என்று வைத்துக் கொள்வோம். அவர் எந்த மருத்துவரை நம்புவது என்று அறியாததால் ஒரு மருத்துவரிடம் செல்ல மறுத்து விடுகின்றார். இருப்பினும், அவரது நண்பர் மருத்துவரைப் பரிந்துரை செய்யும் பொழுது அவர் மகிழ்வுடன் அந்த மருத்துவரிடம் சென்று, அவர் மீது கொண்ட நம்பிக்கையால் அவர் குறிப்பிட்ட மருந்தை அருந்துகின்றார். இயேசுவில் விசுவாசம் கொண்டவர்களைப் பற்றிய விஷயத்திலும் இதுவே உண்மையாக உள்ளது. அவரை விசுவாசிக்கின்றவர்கள் அவருக்குக் கீழ்ப்படிவார்கள் (மத். 7:24-27) மற்றும் இவ்விதமாக அவர்கள் நித்திய இரட்சிப்பைப் பெறுவார்கள் (எபி. 5:9).

## செயல்களினால் இரட்சிப்பு உண்டா?

பவுலும் யாக்கோபும் "விசுவாசம்" மற்றும் "செயல்கள்" (ரோமர் 3:28; யாக். 2:24) பற்றிய தங்களது போதனையில் முரண்படுவதாகச் சிலர் முடிவு செய்துள்ளனர். பவுலும் யாக்கோபும் ஒரே வகையான செயல்களைப் பற்றி எழுதியிருந்தால், நாம் நம்பிக்கையற்ற ஒரு முரண்பாட்டையே காண்போம். இருப்பினும், பவுல் நீதிமானாக்கப்படுவதற்குச் சுய சாதனையின் கிரியைகளைச் செய்தல் பற்றி எழுதியிருக்கையில், யாக்கோபு, நீதியை அளிக்க இயேசு செய்துள்ளவற்றின் மீதுள்ள விசுவாசத்தின் அடிப்படையில் செய்யப்படும் கிரியைகளைக் குறித்து எழுதினார்.

இவ்விரு வகையான செயல்களுக்கும் நல்லதொரு எடுத்துக் காட்டானது எரிகோவின் மதில்கள் அழிக்கப்பட்டதில் காணப்படுகின்றது. அந்த மதில்கள் விழக் காரணமாயிருந்தது என்ன? தேவனுடைய செயலினால் மற்றும் அவருடைய செயலினால் மட்டுமே. இஸ்ரவேலர்கள் அணி வகுத்துச் சென்றதோ அல்லது கூக்குரலிட்டதோ அச்சுவர்கள் இடிந்து நொறுங்கக் காரணமாயிருக்கவில்லை. இஸ்ரவேலரின் செயலின்

*அடிப்படையில் அந்த மதில்கள் விழுந்திருந்தனவென்றால், மக்கள் இடிக்கும் கருவிகளையும், மண் வெட்டிகளையும், கொந்தளங்களையும் பயன்படுத்தி அந்த மதில்களை வீழ்த்தியிருக்க வேண்டும். இப்படிப்பட்ட செயலையே பவுல் ''ஒருவனும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல'' (எபே. 2:9) என்று எழுதும் பொழுது அர்த்தப்படுத்தினார்.*

*"விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழு நாள் சுற்றி வரப்பட்டு விழுந்தது'' (எபி. 11:30). இஸ்ரவேலர்களின் விசுவாசத்தின் அடிப்படையிலான அவர்களின் செயல்பாடானது யாக்கோபு விவாதித்த செயல்களின் விவரிப்பாக உள்ளது. அவர்களின் செயல்பாடானது அவர்களால் செய்ய முடிந்தவற்றின் மீதல்ல, ஆனால் தேவன் செய்வதாகக் கூறியிருந்த வாக்குத்தத்தத்தின் மீது கொண்ட விசுவாசத்தின் அடிப்படையில் அமைந்திருந்தது.*

*ஆசீர்வாதங்களை உண்டாக்கும் செயல்களின் வகையில் ஞானஸ்நானத்தை வைக்க முடியாது. விசுவாசம், மனந்திரும்புதல் மற்றும் அறிக்கையிடுதல் ஆகியவற்றைப் போலவே ஞானஸ்நானமும் பாவங்களை நீக்குவதற்கான உள்ளான திறன் எதையும் கொண்டிருப்பதில்லை. ஞானஸ்நானம் என்பது சுயசாதனையின் செயலாய் இருந்தால், இரட்சிப்பு மற்றும் பாவமன்னிப்புக்கென்று எதையேனும் செய்வதிலிருந்து அது விலக்கப்பட முடிந்திருக்கும். பாவங்களை நீக்கும் வல்லமையானது தண்ணீரிலோ, ஞானஸ்நானத்தைச் செய்விக்கிறவரிடத்திலோ அல்லது ஞானஸ்நானம் பெறத் தன்னைக் கீழ்ப்படுத்துகின்றவரிடத்திலோ இருப்பதில்லை. இயேசுவின் இரத்தம் மட்டுமே அந்த வல்லமையைக் கொண்டுள்ளது (மத். 26:28; எபி. 9:22). எரிகோவின் மதில்களைக் குறித்து இஸ்ரவேலரின் செயல்பாட்டில் இருந்ததைப் போலவே ஞானஸ்நானத்திலும் உள்ளது: ஈடுபட்டுள்ளவர்களின் செயல்களோ அல்லது நடவடிக்கைகளோ விரும்புகின்ற ஆசீர்வாதத்தை உண்டாக்க முடியாது.*

*தேவனுடைய வாக்குத்தத்தத்தின் மீது இஸ்ரவேலர்கள் கொண்ட விசுவாசமானது அவரது அறிவுறுத்தலுக்குக் கீழ்ப்படியும்படி அவர்களைத் தூண்டும் வரையிலும் தேவன் இஸ்ரவேல் மக்களை ஆசீர்வதிக்கவில்லை. தேவன் தாம் பலனளிக்கும் விசுவாசத்திற்கு இதை ஒரு முன்மாதிரியாகக் கொடுத்துள்ளார் (எபி. 11:30).*

*ஞானஸ்நானத்தின் செயல்பாடும் இதற்கு இணையாகவே உள்ளது. பவுல், ''ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாயும் இருக்கிறீர்கள்'' (கொலோ. 2:12) என்று எழுதினார். இதே வழி முறையில், இஸ்ரவேல் மக்களின் விசுவாசம் மற்றும் தேவனுடைய சித்தத்திற்கு அவர்களின் கீழ்ப்படிதலுள்ள பதில்செயல் ஆகியவற்றின் காரணமாக தேவன் இஸ்ரவேலருக்குப் பதில்செயல் செய்தார். அவர்களின் அணிவகுத்துச் செல்லுதல், சத்தமிடுதல் மற்றும் எக்காளங்கள் ஊதுதல் ஆகியவற்றிற்குத் தேவன் அவர்களுக்குப் பலன் அளித்தது போலவே (யோசு.*

*6:1-20)*, நாம் ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப்படும் பொழுது தேவனுடைய செயலின் மீதுள்ள நமது விசுவாசத்தின் காரணமாக அவர் நமது பாவங்களை மன்னிப்பார் *(மாற். 16:16; அப். 2:38; 22:16; கொலோ. 2:12, 13)*.

இஸ்ரவேலர்களின் செயல்பாடுகளில், பலனைப் பெறுவதற்கான உள்ளான திறன் எதுவும் இருந்ததில்லை, மற்றும் நாம் ஞானஸ்நானம் பெறும் செயலும் நம்மை இரட்சிப்பதற்கான உள்ளான திறன் எதுவும் கொண்டிருப்பதில்லை. அவர்கள் செய்த எச்செயலின் மூலமாகவும் அவர்களின் ஆசீர்வாதம் சாதிக்கப்படவில்லை, மற்றும் நாம் செய்கின்ற எச்செயலின் மூலமாகவும் நமக்கு ஆசீர்வாதம் கொண்டு வரப்படுவதில்லை. இருப்பினும், தேவன் செய்திருந்த வாக்குத்தத்தத்தின் மேல் இஸ்ரவேலர்கள் கொண்டிருந்த விசுவாசமானது கீழ்ப்படிதலில் வெளிப்படுத்தப்படும் வரையிலும் அவர்களுக்குப் பலன் அளிக்கப்படவில்லை; அது போலவே, தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளவற்றின் மீதான நமது விசுவாசம் ஞானஸ்நானத்தில் வெளிப்படுத்தப்படும் வரையிலும் நாம் பலன் அளிக்கப்படுவதில்லை. நாம் நமது செயல்களினால் இரட்சிக்கப் படுவதில்லை. நாம் செய்கின்ற எதுவும் நமது இரட்சிப்பைச் சாதிக்க முடியாது, ஏனெனில் அது இயேசுவால் சிலுவையில் சாதிக்கப்பட்டாயிற்று. நாம், சிலுவையில் அவரது மரணத்தினால் உண்டாக்கப்பட்ட மன்னிப்பைப் பெறுவதற்கு விசுவாசத்தினால் தூண்டப்பட்ட செயலின் மூலம் இரட்சிக்கப்படுகின்றோம்.

ஞானஸ்நானம் என்பது நாம் செய்கின்ற வேலையல்ல. நம்மை நாமே முழுக்காட்டுவதற்குப் பதிலாக, நம்மை தண்ணீருக்குள் அடக்கம் செய்யும் இன்னொருவருக்கு நாம் கீழ்ப்படிகின்றோம். ஞானஸ்நானம் என்பது எந்தக் கருத்தமைவிலும் நாம் செய்யும் செயலாய் இருப்பதில்லை; மாறாக, ஏதோ ஒன்று நமக்குச் செய்யப்படுகின்றதாக உள்ளது. ஞானஸ்நானமானது நமது பாவங்களை மன்னிக்க உள்ளான திறன் எதுவும் கொண்டுள்ளதாக நாம் விசுவாசிப்பதனால் அல்ல, ஆனால் ஞானஸ்நானத்தில் நமது பாவங்களை நீக்க தேவனே கிரியை செய்கின்றார் என்று நாம் விசுவாசிப்பதாலேயே நாம் ஞானஸ்நானத்திற்குக் கீழ்ப்படிகின்றோம் *(கொலோ. 2:12, 13)*. பத்தொன்பதாம் நூற்றாண்டில் (கிறிஸ்தவத்தை) மீளக் கட்டியெழுப்பும் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான அலெக்ஸாண்டர் கேம்ப்பெல் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> இறந்த மனிதர்கள் தங்களைத் தாங்களே அடக்கம் செய்து கொள்வதோ அல்லது தங்களைத் தாங்களே மீண்டும் உயிர்ப்பித்துக் கொள்வதோ இல்லை. ஞானஸ்நானத்தில் நாம் நமது சம்மதத்தைத் தருவதைத் தவிர மற்ற ஒவ்வொன்றிலும் செய்விக்கப்படும் தன்மை உடையவர்களாகவே இருக்கின்றோம். நாம் இன்னொருவரால் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்படுகின்றோம். ஆகையால் ஞானஸ்நானத்தின் எந்தக் கண்ணோட்டத்திலும் அது நற்கிரியை என்று அழைக்கப்பட முடியாது. ஆகையால் நமது ஆவிக்குரிய உறவில் ஞானஸ்நானம் கொண்டிருக்கக் கூடிய செல்வாக்கானது நமது சொந்த

செயலின் எந்தத் தகுதியினாலும் ஏற்படுவதில்லை; உண்டாக்கும் காரணம் என்ற வகையில் அல்ல, ஆனால் ஒரு கருவி வகையிலான மற்றும் உடன் நிகழ்வு வகையிலான காரணத்தினால் நாம் "கிறிஸ்துவை அணிந்து கொள்ளுகின்றோம்" மற்றும் அவருடன் முறைப்படியாகவும் மற்றும் இருதயத்திலும் இணைக்கப் படுகின்றோம், அவருடன் உடன்படிக்கையில் பிரவேசிக்கின்றோம், மற்றும் அவருடைய மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் அவருடன் ஒன்றாக்கப்படுகின்றோம். ஆகையால், "உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றீர்கள்" - "கிறிஸ்துவை அணிந்து கொண்டீர்கள்" என்று அப்போஸ்தலர் கூறினார்.[6]

## விசுவாசம் ஞானஸ்நானத்துடன் இணைக்கப்பட்டுள்ளதா?

ஞானஸ்நானம் விசுவாசத்திலிருந்து பிரிக்கப்பட முடியுமென்றால், இரட்சிப்புக்கு ஞானஸ்நானம் அவசியமில்லை; ஏனெனில் இரட்சிப்பு விசுவாசத்தைச் சார்ந்ததாகவே உள்ளது. இருப்பினும், வேதாகமம் ஞானஸ்நானத்தைப் பிரிக்க இயலாத வகையில் விசுவாசத்துடன் இணைக்கின்றது (மாற். 16:16; அப். 8:12, 13; 18:8; கலா. 3:26, 27; கொலோ. 2:12). புதிய எருசலேம் வேதாகமத்தில் இந்தக் கருத்தின் மீது உள்ள கூற்று சரியானதாக உள்ளது:

> ஞானஸ்நானம் என்பது விசுவாசத்திற்கு நேர் மாறானதாக இருப்பதில்லை, ஆனால் அதனுடன் இணைந்து செல்லுகின்றது, ... மற்றும் ஞானஸ்நானச் சடங்கின் செயல்படும் அடையாளத்தின் மூலமாக அதற்கு வெளிப்படையான விளக்கத்தைக் கொடுக்கின்றது. இந்தக் காரணத்தினாலேயே பவுல், விசுவாசம் மற்றும் ஞானஸ்நானம் ஆகியவற்றிற்கு ஒரே விதமான செயல்விளைவுகளைக் குறிப்பிட்டார் (இ.வ. ரோமர் 6:3-9 மற்றும் கலா. 2:16-20).[7]

டக்ளஸ் மூ அவர்கள் ரோமர் 6க்கு விளக்கவுரை அளிக்கையில், "விசுவாசம் ஞானஸ்நானத்திற்கு வழி நடத்துகின்றது என்று யூகிக்கப்படுவது போலவே, ஞானஸ்நானம் விசுவாசத்தை அதன் மதிப்புத் தன்மைக்கு யூகிக்கின்றது. எனவே, வ. 3-4ல் நாம் விசுவாசம் மற்றும் ஆவியானவரின் வரம் ஆகியவற்றை முன் அனுமானம் செய்து, ஞானஸ்நானம் என்பது முழுமையான மாற்றம் - தூண்டுதல் அனுபவத்திற்காய் நிலைநிற்கின்றது என்று யூகிக்க முடியும்"[8] என்று எழுதினார்.

இதே வழிமுறையில், தேவனுடைய ஆசீர்வாதங்கள் விசுவாசத் திலிருந்து விளைவதாகக் கூறப்படுகின்றது - ஆனால் ஏற்புடைய செயல்கள் நடந்த பிறகே இவை விளையும். ஆபேல் சரியான பலியைச் செலுத்தினார், நோவா பேழையைக் கட்டினார், ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தார், மற்றும் இஸ்ரவேலர்கள் எரிகோவைச் சுற்றி அணி வகுத்துச் சென்றனர் (எபி.

11:4-8, 30). இரட்சிப்பும் இதைப் போலவே விசுவாசத்திற்குக் குறிப்பிடப் படுகின்றது - ஆனால் ஞானஸ்நானம் பெற்ற பிறகு மட்டுமே இரட்சிப்பு உண்டாகிறது (மாற். 16:16; 1 பேது. 3:21). செயல்படும்படி தேவனால் கூறப் பட்டு, தேவனுடைய வசனத்தின் மீது கொண்ட விசுவாசத்தினால் பதில் செயல் செய்யத் தவறியவர்கள் எவருக்கும் ஆசீர்வாதங்கள் ஒருக்காலும் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டதில்லை. தேவன் செயல்பாட்டைக் கட்டளையிடும் பொழுது, அவர் வாக்குத்தத்தம் செய்த ஆசீர்வாதத்தைக் கொடுக்கு முன்பு, செயல்படத் தேவையான விசுவாசத்தை எப்பொழுதுமே அவர் கேட்கின்றார். ஒருவர் ஞானஸ்நானம் பெறும் பொழுது, பாவங்களை மன்னிப்பதாகத் தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசம் கொள்ளுதல் என்பது வழக்கமான விதியாய் உள்ளது; இது வேதாகம ரீதியான விசுவாசத்திற்கு ஒரு விதி விலக்காய் இருப்பதில்லை.

## தொகுப்புரை

தேவனுடைய சித்தத்திற்குப் பதில் அளிக்கும்படித் தூண்டும் வகையில் உள்ள நம்பிக்கையே தேவன் பலன் அளிக்கும் விசுவாசமாக உள்ளது. ஒருவர் ஞானஸ்நானம் பெறுகையில் தேவனுடைய செயலின் மீதுள்ள விசுவாசத்திற்கே தேவன் பாவமன்னிப்பைக் கொண்டு பலனளிப்பார். விசுவாசமின்றி, மனிதரின் எந்தச் செயலும் தேவனுக்குப் பிரியமாய் இருக்க முடியாது (எபி. 11:6); ஆகையால், ஞானஸ்நானம் என்பது விசுவாசத்துடன் இணைந்திருக்கும் பொழுது மட்டுமே தேவனுடைய பார்வையில் மதிப்புள்ளதாக இருக்கின்றது.

இயேசு நமது பாவங்களுக்காக மரித்தார் (1 கொரி. 15:1-3) என்ற சுவிசேஷத்தை நாம் விசுவாசித்தால், நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது இரட்சிக்கப்படுகின்றோம் (மாற். 16:15, 16). "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன்" என்ற சொற்றொடரைப் பற்றி மொழிபெயர்ப் பாளர்களான இராபர்ட் பிராட்ச்சரும், யூஜீன் நிடாவும், "... இரு எச்சவினைகளையும் ஆளுமை செய்கின்ற ஒற்றைத் திட்டவட்ட சுட்டுச் சொல்லானது, யார் இரட்சிக்கப்படுவார் என்று விவரிக்கின்ற இரு வினைச் சொற்களையும் இணைக்கின்றது; இவ்வாக்கிய உறுப்பானது 'ஞானஸ் நானம் பெற்ற விசுவாசி' என்று மொழிபெயர்க்கப்பட முடியும்" என்று எழுதினார்.[9] இந்த நபர்தான் "இரட்சிக்கப்படுபவராக" இருக்கின்றார்.

விசுவாசமற்ற ஞானஸ்நானம் செல்லத்தக்கதல்ல, அல்லது தேவனு டைய சித்தத்தின்படியாக வெளிப்படுத்தப்படாத வரையில் விசுவாசமும் செல்லத்தக்கதல்ல. ஞானஸ்நானம் பெறுவதினால் நாம், இயேசு அடக்கம் பண்ணப்பட்டு உயிர்ப்பிக்கப்பட்டார் என்ற நமது விசுவாசத்தை வெளிப் படுத்துகின்றோம், ஏனெனில் நாம் அவருடன் இணையவும் மற்றும் அவருடன் தொடர்ந்த ஒரு ஐக்கியத்தில் பிரவேசிக்கவும், அடக்கம் பண்ணப்படுதல் உயிர்த்தெழுதல் என்ற அதே செயல்பாட்டிற்கு நாம் கீழ்ப்படிகின்றோம். அவருடைய இரத்தம், அடக்கம், மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றின் மீது நாம் விசுவாசம் கொண்டுள்ள பொழுது,

ஞானஸ்நானத்தில் அவரோடு கூட அடக்கம் பண்ணப்படுவதன் மூலமாக நாம் அந்த விசுவாசத்தை வெளிப்படுத்துபவர்களாய் இருக்க வேண்டும்.

---

குறிப்புகள்

[1]*"பாவிகளின் ஜெபம்" என்பதை மீண்டும் மீண்டும் கூறுதல் என்பது வேதாகமத்தின் போதனையாய் இல்லாதிருக்கையில், "விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே" இரட்சிப்பு உள்ளதாக உரிமைகோருபவர்களில் பலரால் இது போதிக்கப்படுகின்றது. ஒரு ஜெபத்தைக் கூறுதல் என்பது கிறிஸ்தவரல்லாதவரைத் தேவனுடைய கிருபைக்குள் கொண்டு வர முடியாது, ஏனெனில் பவுலிடம் அனனியா, "உன் பாவங்கள் போகக் கழுவப்படு" (அப். 9:10, 11; 22:16) என்று கூறுவதற்கு முன்பு பவுல் பல நாட்கள் ஜெபித்திருந்தார்.* [2]R. Bultmann, "*pisteuo,*" in *Theological Dictionary of the New Testament,* ed. Gerhard Kittel and Gerhard Friedrich, trans. and abr. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 854. [3]*Apeithia என்பது "கீழ்ப்படியாமை" என்பதாக ஆறுமுறைகள் தருவிக்கப்பட்டுள்ளது; apeitheo என்பது (எனது வேதாகமத்தில் உள்ள ஓரக்குறிப்பொன்றில்) "அவிசுவாசம்" என்று ஒருமுறையும், "கீழ்ப்படியாமை" என்று பத்துமுறைகளும், மற்றும் "கீழ்ப்படியவில்லை" என்று மூன்று முறைகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. Apeithes என்பது "கீழ்ப்படியாதவர்" என்று ஆறுமுறைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வார்த்தைகளை "கீழ்ப்படியாமை" என்று ஒரே சீராக மொழிபெயர்த்துள்ள* NASB *போலின்றி,* KJV*யில் பல இடங்களில் "விசுவாசமில்லாமை" அல்லது "அவிசுவாசம்" என்றுள்ளது.* [4]*The Book of Discipline of the United Methodist Church* (Nashville: United Methodist Publishing House, 1976), 57. [5]*விசுவாசிக்கத் தலைப்பட்டுள்ளவர்கள் இன்னமும் தேவனுடைய பிள்ளைகளாகாமல் இருக்கலாம், ஆனால் அவர்கள் "தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் பெற்றவர்களாய்" (யோவா. 1:12) இருக்கின்றனர். யோவா. 12:42ல், "ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம் அதை அறிக்கை பண்ணாதிருந்தார்கள்" என்று கூறப்படுகின்றது. இந்த அதிகாரிகள் விசுவாசித்திருப்பினும், இவர்களை இயேசு, பிதாவின் முன்பாக மறுதலிப்பார், ஏனென்றால் இவர்கள் அவரைக் கர்த்தரென்று அறிக்கையிடவில்லை (மத். 10:33; ரோமர் 10:9, 10 ஆகிய வசனங்களைக் காணவும்).* [6]Alexander Campbell, *Christian Baptism With Its Antecedents and Consequents* (Nashville: McQuiddy Printing Co., 1913), 205. [7]Henry Wansbrough, gen. ed., The New Jerusalem Bible (New York: Doubleday, 1985), 1875, n6a. [8]Douglas J. Moo, *The Epistle to the Romans*, The New International Commentary on the New Testament, gen. eds. Ned B. Stonehouse, F. F. Bruce and Gordon D. Fee (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1996), 366. [9]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translator's Handbook on the Gospel of Mark* (New York: United Bible Societies, 1961), 511.